1993 ஏப்ரல் 22]

நாள் போக்குவரத்து நெரிசல் அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. இன்றைய சூழ்நிலையிலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுற்றுச்சாலை அமைக்கும் திட்டத்தைப் பற்றி இங்கே விளக்கமாகச் சொன்னார்கள். அந்த சுற்றுச் சாலை எந்த இடத்தில் ஆரம்பிக்கின்றது? அது நகரில் எந்த இடத்தில் முடிகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தற்சமயம் கையகப்படுத்தப் பட்டுள்ள இடங்களில் முதல் கட்டமாக 5,5 கிலோ மீட்டர் நீளத்திற்கு திருச்சி-மேலூர் மதுரை சாலை கிலோ மீட்டர் 445/10-ல் பிரிந்து மதுரை-தனுஷ்கோடி தேசிய நெடுஞ்சாலை நம்பர் 19 கிலோ மீட்டர் 4,10 என்ற இடத்தில் இணையும் வகையில் இப்போது அந்த வேலை தொடங்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 432, திரு. பி. சொக்கலிங்கம். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

432.—

மதுராந்தகம்—சூனாம்பேடு சாலையில் இருப்புப்பாதை கடந்து செல்லும் இடத்தில் போக்குவரத்து பாதிப்பு.

*11784— திரு. பி. சொக்கலிங்கம் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுராந்தகம்—ஆனாம்பேடு சாலையில் இருப்புப் பாதை கடக்கும் இடத்தில் போக்குவரத்து பாதிக்கப்படுவதை அரசு அறியுமா

(ஆ) ஆம் எனில், அங்கு மேம்பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: பொதுப்பணித்துறை அமைச்சர் :

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

(ஆ) தற்போது அங்கே இருக்கின்ற இருப்புப் பாதைக் கடவு குறியீட்டை அடைகின்ற அளவுக்கு இருந்தால்தான் அந்த மேம்பாலம் அமைக்கின்ற பணியை அரசு தொடங்க முடியும். இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில் அந்த அளவுக்கு எட்டாத காரணத்தால் இப்போது அந்தப் பணியை எடுத்துக்கொள்வதற்கான திட்டம் எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. சொக்கலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம்—சூணாம்பேடு சாலை வழியாகத் தான் அச்சரப்பாக்கம் தொகுதியைச் சேர்ந்த பெரும்பாலான மக்களும், மதுராந்தகம் தொகுதியைச் சேர்ந்த பெரும்பாலான மக்களும், மதுராந்தகம் வரவேண்டியிருக்கிறது. அதிலும் குறிப்பாக கர்ப்பிணி பெண்களும், விபத்துக்குள்ளானவர்களும் அந்த வழியாகத்தான் மதுராந்தகம் மருத்துவமனைக்கு அழைத்து வரவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அந்த இரயில் இருப்புப் பாதையின் வழியாக அடிக்கடி இரயில் செல்வதால் போக்குவரத்து தடைபட்டு கர்ப்பிணி பெண்களும், விபத்துக்குள்ளானவர்களும் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். இதை கருத்தில் கொண்டாவது மாண்புமிகு ஆற்றல் மிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் விரைவில் இந்தத் திட்டத்தைச் செயற்படுத்த முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இருப்புப் பாதைக் கடவு பொறுத்தவரையில் ஏற்கெனவே வாகனங்கள் போக்குவரத்தில் பிரச்சினை இருக்கிறது என்பதை இந்த அரசு நன்றாக அறிந்து இருக்கிறது. அந்த மேம்பாலம் அமைக்கின்றபோது நாம் பாதித் தொகையையும் மத்திய அரசு பாதித் தொகையையும் போட்டு அந்தப் பால வேலை செய்கின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால், எல்லா மேம்பாலங்களையும் நாம் எடுத்து செய்வதற்கு நிதி ஆதாரம் நம்மிடத்தில் போதுமானதாக இல்லை. ஆகவே, சிலவற்றை நாம் முன்னுரிமைக் கொடுத்து செய்கிறோம். இந்த மேம்பாலத்தைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 3 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. ஆகவே, ஒரு நெடுஞ்சாலையில் இருக்கின்ற இந்த பாலத்திற்கு 3 கோடிரூபாயில் கட்டுவதற்கு இந்த அளவுக்கு நிதி ஆதாரம் தற்போது இல்லாத காரணத்தல் தான் அந்தப் பிரச்சினையை கொஞ்சம் காலத்திற்கு தள்ளி வைத்து இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இருந்தாலும் அந்தப் பகுதியில் போக்குவரத்து பாதிப்பு அடிக்கடி ஏற்படுகிற பிரச்சினை இருக்கிறது என்பதை இந்த அரசு நன்கு அறிந்திருக்கிறது. ஆகவே, வரும் காலங்களில் இதை எப்படி எடுக்கலாம் என்பதை அரசு பரிசீலனைச் செய்து மைய அரசோடு கலந்து பேசி முன்னுரிமைப் பட்டியலில் சேர்க்கலாமா என்பதை இந்த அரசு கனிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.